மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.

முன்னிலை : திருமதி.P.கோபால அரசி, பி.எஸ்சி., பி.எல்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ம் நாள் சனிக்கிழமை.

I.A. No.502/2024 in O.S.No.25/2024

1. வட்டாட்சியர் அவர்கள், சாத்தான்குளம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தூத்துக்குடி.

.. மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள்

/எதிர்/

எவிட்டா ராணி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 09.11.2024 இன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வில்லின் பெலிக்ஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ள சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் ஆய்வின் கீழ் இருந்தும் வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை, ரத்து செய்து உத்தரவிடக்கோரி, உ.வி.மு.ச. கட்டளை 9 விதி 7ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) மனுவின் சுருக்கம்:-

(1.1) இம்மனுவின் மனுதாரர்கள், அசல் வழக்கில் 2,3 ம் பிரதிவாதிகள் ஆவார்கள். மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 21.10.2024ல் வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் எதிர்வழக்குரை தயாரான நிலையில், அவசர வேலை நிமித்தம் வெளியூர் சென்றதால் எதிர்வழக் குரையை தாக்கல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுவிட்டது. அன்றைய தினத்தில் 21.10.2024-ல் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத காரணத்தால் மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(1.2) 21.10.2024 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதது வேண்டும் என்று ஏற்பட்டதல்ல. இந்த வழக்கில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் மனுதாரர்களுக்கு தெரிய வந்தவுடன் உடனடியாக தயார் செய்து வைக்கப்பட்டிருந்த எதிர்வழக்குரையுடன் ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் 21.10.2024 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யாவிடில் அரசாங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும். ஆகவே 2,3 ம் பிரதிவாதிகளுக்கு எதிராக, 21.10.2024 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரைச்சுருக்கம் :</u>**

(2.1) மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. உண்மையில் அசல் வழக்கை காலதாமதபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். தாவா மனுவில் 2 ம் எதிர்மனுதாரரான சாத்தான்குளம் வட்டாட்சியர் அவர்கள் அவசர வேலை காரணமாக வெளியூர் சென்றதாக உண்மைக்கு புறம்பாக சங்கதிகள் கூறி மனுவை தாக்கல் செய்துள்ளார். அலுவலக நிமித்தமாக சென்றதாக தனது மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை.

(2.2) மேலும், அவருக்கு தாவா மனுவை தள்ளுபடி செய்தது எந்த தேதியில் தெரிய வந்தது என்பதை தெளிவாக கூறவில்லை. மேலும் அரசு அதிகாரியான சாத்தான்குளம் வட்டாட்சியர் அவர்கள் சமூகம் நீதிமன்றத்தை மதிக்காமல், பொறுப்பற்ற முறையில் வெளியூர் சென்றதாக ஏமாற்றி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும் தாவா மனுவில் கண்ட அபிடவிட்டில் சாத்தான்குளம் வட்டாட்சியர் அவர்கள் கையொப்பம் செய்யாமல் அரசு வழக்கறிரின் உதவி வழக்கறிஞர் கையொப்பம் செய்துள்ளார். அதனையிட்டும் தாவா மனுவானது தள்ளுபடி செய்யக்கூடியதாகும். எனவே மனுதாரர்களின் மனு, செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று, எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

4) **<u>தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை :-</u>**

மனுதாரர்/2,3ம் பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்சஉத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5) **<u>தீர்வு :</u>**

(5.1) அசல் வழக்கானது வாதிக்கு பாத்தியப்பட்ட பிராது தபசில் சொத்தினை வாதி சுமூகமாய் அனுபவிப்பதற்கு 1ம் பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ, இடையூறு செய்யும் விதமாக, பிராது தபசில் சொத்தில் அமைக்கப்பட்டுள்ள கிழக்குபுற கம்பி வேலியை சேதப்படுத்தவோ அல்லது வேறு எவ்வித வகையிலும் இடையூறு செய்யவோ கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, எதிர்மனுதாரரால் 17.04.2024ல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.2) அசல் வழக்கில், 27.06.2024 அன்று பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிர்வழக்குரைக்காக 29.07.2024 முதல் 21.10.2024 வரை வாய்தா போடப்பட்டு, 21.10.2024ல் 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்கு தாக்கல் செய்யப்பட்டும், அதே தேதியில் 2,3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். மேலும் 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை அடிப்படையில், அசல் வழக்கில் எழுவினா வனைய வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி, இம்மனுவை தாக்ககல் செய்துள்ளார்.

(5.3) எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் அசல் வழக்கை காலதாமதபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் மனுதாரர்கள் அவசர வேலை காரணமாக வெளியூர் சென்றதாக கூறியுள்ளார்களே தவிர, அலுவலக வேலை காரணமாக சென்றதாக கூறவில்லை என்றும், எனவே தாவா மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(5.4) மனுதாரர்கள் மனு பிரமாண பத்திரத்தில், மனுதாரர்கள் வெளியூரில்

இருந்ததால், வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விட்டதாக கூறியுள்ளது, போதுமான காரணமாக இல்லாத போதிலும், இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பதாலும், மனுதாரர்களுக்கு வழக்கினை எதிர்கொள்ள, போதிய வாய்ப்பு வழங்க வேண்டியிருப்பதாலும், மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, இம்மனுதாரர் ரூ.500/-ஐ, எதிர்மனுதாரர்க்கு 11.11.2024-க்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் மேற்படி உத்தரவு ரத்தாகிவிடும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தி சரிபார்க்கப்பட்டு, 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 09 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

<u>இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் :-</u> இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

District Munsif Court,
Sathankulam.
I.A.502/2024 in O.S.25/2024
Draft/Fair Order
Dated : 09.11.2024